உ

சர்வம் சிவசக்திமயம் ஜகத்



ஸ்கணபதி ஸ்துதி
திருவாக்குஞ் செய்கருமங்கை கூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூடப் புவர் தம் கை.



ஸ்சிவன் ஸ்துதி
காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.



ஸ்ரீ அம்பா ஸ்துதி
தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வு அறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.



ஸ்ரீமுருகன் ஸ்துதி
உருவாய் அருவாயுளதாயிலதாய்
மருவாய் மலராய் மணியாயொளியாய்க்
கருவாயுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாயருள் வாய்குகனே.



ஸ்ரீ பைரவர் ஸ்துதி
பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலைகிள்ளியே யொழிந்தவானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

# திருவருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில். லிவர்பூல் ~ ஐக்கியராச்சியம்

## MAHA KUMBABHISHEKAM OF SRI MUTHUMARIAMMAN TEMPLE IN LIVERPOOL - UK

**17 Fieling Street, Kensington, Liver Pool L6 9AP** Charity Registration No: 1101808

## அநாவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபட்க்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக

# விழா விஞ்ஞாபனம் (06.04.2012 வெள்ளிக்கிழமை)

அம்பிகை அடியார்களே!

அண்டசராசரங்கள் அனைத்தையும் பஞ்சகிர்த்தியங்கள் மூலம் அருளாட்சி புரியும் அன்னை மஹாசக்தி தனது பல்வேறு பேதவடிவங்களில் ஸ்ரீமுத்து மாரியம்மன் என்னும் வடிவம் தாங்கி அனைத்து ஜீவராசிகளுக்கும் அன்னையாக இருந்து ரட்ஷித்துவருகிறார். கலையாத கல்வி, குறையாத வயது, கபடுவராத நட்பு, கன்றாத வளமை, குன்றாத இளமை, கழுபிணி இல்லாத உடல், சலியாத மனம், அன்பு அகலாத மனைவி, தவறாத சந்தானம், தாழாத கீர்த்தி, மாறாத வார்த்தை, தடைகள் வராத கொடை, தொலையாத நிதி, கோணாத கோல, ஓர் துன்பம் இல்லாத வாழ்வு, தெய்வப்பாதத்தில் அன்பு, உதவிப்பெரிய தொண்டரோடு கூட்டு என்று கூறக்கூடிய மஹாபெரும் பாக்கியங்களை அருளி கற்பனைக்கெட்டாத தன்மையுடைய மஹாசக்தி ஆன்மாக்கள் தன்னை வழிபட்டு உய்வடையும் வண்ணம் சிறப்புறு உருவம் தாங்கி ஆலயங்களில் வீற்றிருந்து அருள்மாரி பொழிகிறாள். இவ்வாறாக அன்னை மஹாசக்திக்கு பல்வேறு இடங்களில் பல்வேறு ஆலயங்கள் அமைக்கப்பெற்று வழிபாடாற்றும் வகையில் ஐக்கியராச்சியத்தில் சகல வளங்களும் நிரம்பப்பெற்று சைவமும் தமிழும் தவழ்ந்து வரும் லிவப்பூல் தேசத்தில் ஸ்ரீமாரிபுரம் என்னும் தமிழ் நாமமுடைய புண்ணிய ஷேத்திரத்தில் அன்னைக்கென ஓர் ஆலயத்தை அமைத்து நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ சர்வமங்களகரமான கரவருஷம் உத்தராயணம், சிசிரருது, பங்குனி மாதம் 24ம் நாள் ஆங்கிலம் 06.04.2012 வெள்ளிக்கிழமை பௌர்ணமி திதியும், அஸ்த்த நட்ஷத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபயோகசுபதினத்தில் அன்று பகல் 9மணி 30நிமிஷம் தொடக்கம் 11மணி 15நிமிஷம் வரையிலுள்ள மிதுனலக்ன சுபமுகூர்த்த வேளையில் நூதன ஆலயஸ்தாபிகள் ஸ்ரீகருணாகரவிநாயகர், அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன், ஸ்ரீவள்ளி தேவசேனாசமேத முத்துக்குமாரசுவாமி, காசிவிஸ்வநாதப்பெருமான், மூலாதான விநாயகர், உற்சவமூர்த்திகள், நவக்கிரகங்கள், ஸ்ரீ ஞான பைரவப்பெருமான், சிம்மம், பலிபீடம் ஆகிய மூர்த்திகளுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்குத் தேவியின் திருவருள் கைகூட்டியுள்ளது. எனவே அடியார்கள் யாவரும் இக்கும்பாபிஷேக விழாவிலும், அதற்கு முன்பின் நடைபெறவிருக்கும் சகலகிரிஜா நிகழ்வுகளிலும் பங்குபற்றி எம்பெருமாட்டியினது திருவருளைப்பெற்று, அஞ்ஞானம் அகன்று மெஞ்ஞானம் பெற்று சர்வா பீஷ்ட சகல ஐஸ்வர்யங்களோடு பெருவாழ்வு வாழ்வீர்களாக!

## மஹாகும்பாபிஷேக கிரியாகால நிகழ்வுகள்

**நிகழும் கரவருஷம் பங்குனி மாதம் 20ம் நாள் 02.04.2012 திங்கட்கிழமை**

**அதிகாலை 5.30மணி** : கர்மாரம்பம், ஆச்சார்யவண்ணம், விக்னேஸ்வர பூஜை, பிரதிஷ்டா மஹா சங்கல்பம், வருணகும்ப பூஜை, பஞ்சகௌவ்ய பூஜை, புண்ணியாகவாசனம், தேவ பிராம்மண அனுஞ்ஞை, மூர்த்தி அனுஞ்ஞை, தனபூஜை, லஷ்மி ஹோமம், திரவ்விய விபாகம், சிற்பாசாரிகள் உபசாரம், முகூர்த்த நிர்ணயப் பத்திரிகாபடனம், திரவ்விய சாலா பூஜை.

**பகல் 10.00மணி** : ஸ்ரீமஹாகணபதிஹோமம், வேதஸ்தோத்திர கீததாள சர்வாஞ்சலி சமர்ப்பணம், ஸ்ரீ விநாயகர் அகவல்பாராயணம், பிரம்மச்சார்ய பூஜை, திருவருட்பிராதம், அன்னதானம்.

**பிற்பகல் 3.00மணி** : விக்கினேஸ்வரப்பூஜை, புண்ணியாகவாசனம், கிராமசாந்தி வாஸ்துசாந்தி, பிரவேசபலி, ரஷேக்ணஹோமம், திசா ஹோமம், மூர்த்திஹோமம், சம்ஹிதா ஹோமம், நூதனமூர்த்திகள் தான்யாதிவாசம், ஜலாதிவாசம், நயனோன்மீலனம், சயனாரோகனம், திருவருட்பிரசாதம்.

**பங்குனி 21ம் நாள் 03.04.2012 செவ்வாய்க்கிழமை**

**காலை 9.00 மணி** : விக்னேஸ்வரபூஜை, புண்ணியாகவாசனம், நவக்கிரகஹோமம், கோளறுபதிகபாராயணம், திருவருட்பிரசாதம்.

**மாலை 4.00மணி** : விக்னேஸ்வரபூஜை, புண்ணியாகவாசனம், உத்தமபதவாஸ்துசாந்தி, ஆலய கர்ப்பாவரண குண்டமண்டலயாகசாலை பிரகாரசுத்தி, கோமாதா பூஜை, கஜபூஜை, வேதஸ்தோத்திர திருமுறைபாராயணம், திருவருட்பிரசாதம்.

**பங்குனி 22ம் நாள் 04.04.2012 புதன்கிழமை**

**அதிகாலை 4.00மணி** : விக்னேஸ்வரபூஜை, புண்ணியாகவாசனம், ஸ்துாபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், எண்ணைக்காப்பு, தீர்த்த சங்கிரணம், சூரியலக்கினசங்கிரணம், வேதபாராயணம், திருமுறைபாராயணம், திருவருட்பிரசாதம், அன்னதானம்.

**மாலை 3.00மணி** : விக்னேஸ்வரபூஜை, புண்ணியாகவாசனம், பூமிதேவிப்பூஜை, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரட்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கும்பயாகசலாப்பிரவேசம், முதலாம் காலயாகபூஜை, பஞ்சாக்கினி விவஜ்ஜனம், உபசாரபூஜை, வேதபாராயணம், திருமுறை பாராயணம், திருவருட்பிரசாதம்.

**பங்குனி 23ம் நாள் 05.04.2012 வியாழக்கிழமை**

**காலை 8.00மணி** : ஸ்ரீ விக்னேஸ்வரபூஜை, புண்ணியாகவாசனம், விசேஷசந்தி, பூதசுத்தி, இரண்டாம் கால யாகபூஜை, ஹோமங்கள் உபசாரதீபராதனை, வேதஸ்தோத்திரமுறை பாராயணங்கள் திருவருட்பிசாதம் அன்னதானம்.

**மாலை 4 மணி** : ஸ்ரீ விக்னேஸ்வரபூஜை, புண்ணியாகவாசனம், விம்பசுத்தி, மூர்த்திரட்ஷாபந்தணம், மூன்றாம் காலயாக பூஜை, விசேஷ திரவிய ஹோமம், ஸ்பாஷாகுதி, தீபாராதனை, வேதபாராயணம், திருமுறைபாராயணம். திருவருட்பிரசாதம்.

**பங்குனி 24ம் நாள் 06.04.2012 வெள்ளிக்கிழமை**

**காலை 7.00மணி** : ஸ்ரீ விக்னேஸ்வரபூஜை, புண்ணியாகவாசனம், நான்காம் காலபூஜை, விசேஷமஹா பூர்ணகுதி, விசேஷசோட சோபசாரதீபராதனை, அந்தர்பலி, பகிர்பலி, உபசாரசமர்ப்பணம்,

**காலை 9.00மணி** : கும்பங்கள் திருவீதிப் பிரதட்ஷணம், புஷ்பாஞ்சலி சர்வாஞ்சலிசமர்ப்பணம், கும்பஉட்பிரவேசம், நியாசங்கள் தொடர்ந்து பகல் 11.00 மணி 15 நிமிடத்துக்குள் ஸ்துாபி அபிஷேகம் மூர்த்திகள் மஹாகும்பாபிஷேகம் தொடர்ந்து திருக்கடைக்காப்பு, தசமங்களதர்சனம், எஜமான் அபிஷேகம், பிரதிஷ்டாபலசமர்ப்பணம், ஆச்சார்ய சம்பாவனை, மங்களமஹா ஆசீர்வாதம், மஹாபிவேஷம், தீபாராதனை, சீர்வரிசைகள் ஏற்றம், திருவருட்பிரசாதம், அன்னதானம்.

**அடியார்கள் எண்ணைக்காப்பு சாத்துதல்**
04.04.2012 புதன்கிழமை காலை 10.00மணி தொடக்கம் இரவு 7.00மணி வரையும்
05.04.2012 வியாழன் காலை 10.00மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரையும்

*குறிப்பு : கும்பாபிஷேககிரிஜாக்காலங்களில் வேதபாராயணம், ஸ்தோத்திரப்பாராயணம், திருமுறைப்பாராயணம், ஆசியுரைகள், அருளுரைகள், கிரியை விளக்கங்கள் பற்றிய விளக்கங்கள் என்பன இடம்பெறும்.*

***கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். மண்டலாபிஷேக உபயம் நடாத்த விரும்புபவர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.***

### அருள்ஆசி

சிவாச்சார்யமணி, பிரதிஷ்டாதிலகம்
**சிவஸ்ரீ வைத்தீஸ்வர சபாரத்தினக்குருக்கள் அவர்கள்**
ஆதீனகர்த்தா - அறங்காவலர் ஸ்ரீகருணாகரப்பிள்ளையார் கோயில்
உரும்பராய் - இலங்கை

சிவாகமஞானபாஸ்கரன் - சர்வசாதகபூஷணம்
**சிவஸ்ரீ தாணு மஹாதேவக்குருக்கள் அவர்கள்**
அதிபர். ஸ்ரீகாயத்திரிபீடம் தர்மசாஸ்த்தர் குருகுலம்
இணுவில் - இலங்கை

**பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார்**
வித்யாபூஷணம் சிவப்பிரதிஷ்டாஞானதிலகம்,
சிவாகமரத்தினம், குருமணி, வாமதேவசிவாச்சார்யார்,
ஜோதிடகணிதர், ஆசிரியர்
**சிவஸ்ரீ சபா. மகேஸ்வரக்குருக்கள் (B.A) அவர்கள்**
பிரதமகுருக்கள் இலண்டன் ஸ்ரீசிவன்திருக்கோயில், லூயிஷம்.

**சர்வ போதகாச்சார்யார்.**
கிரிஜாபூஷணம், வாத்தியவிஸாரதா, ஆகமவித்வான்
**சிவஸ்ரீ அ.நா. சோமஸ்கந்தகுருக்கள் அவர்கள், இலண்டன்.**

**சர்வசாதகாச்சார்யார்**
சைவசித்தாந்த பண்டிதர்
**சிவஸ்ரீ பா. வசந்தன் குருக்கள் B.A (Hons) அவர்கள்**
பிரதமகுருக்கள் - ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயம்
வோல்த்ரம்ஸ்றோ, இலண்டன்.

**சாதகபூஷணம்**
**சிவஸ்ரீ.இ.கமலநாதக்குருக்கள் B.A (Hons) அவர்கள்**
பிரதமகுருக்கள். ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்
என்பீல்ட், இலண்டன்.

**கும்பாபிஷேகத்தில் பங்காற்றிச்சிறப்புத்தரும் குருமார்கள்.**
கிரிஜாரத்தினம் சிவஸ்ரீ ஸ்ரீதரக்குருக்கள் (இலண்டன்)
கிரிஜாசிரோமணி சிவஸ்ரீ இ. வாகீஸ்வரக்குருக்கள் (இலண்டன்)
கிரிஜாபூஷணம் சிவஸ்ரீ விஸ்வேஸ்வரக்குருக்கள் (இலண்டன்)
ஸ்ரீதேவி பூஜாபூக்ஷணம் ஸ்ரீராம் கெங்காதரக்குருக்கள் (இலண்டன்)
ஸ்ரீஸ்கந்த உபாசகரத்தினம் சிவஸ்ரீ. சி. ஜெகதீஸ்வரக்குருக்கள் (இலண்டன்)
கிரிஜாசூடாமணி சிவஸ்ரீ வைத்தியநாதக்குருக்கள் (இலண்டன்)

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோண்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
வான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்"

**யாகசம் ரட்ஷகர்கள்**
பிரம்மஸ்ரீ பிரதீபசர்மா அவர்கள்
பிரம்மஸ்ரீ திவாகரசர்மா அவர்கள்
பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தசர்மா அவர்கள்

**நூதனஆலய நிர்மாணம்**
சிற்பக்கலாநிதி
சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்கள்.
ஜெனா சிற்பக்கலைக்கூடம - இலண்டன்

**திருமுறைபாராயணம்**
திருமுறைச்செல்வர்
உயர்திரு. சபா. மகேஸ்வரன் அவர்கள் (இலண்டன்)
சுபமங்களம்.

**மங்கள இசை**
இசைமேதைகள்
ரம்பத்குமார், தணிகைவேலன் அவர்கள்
(இலண்டன்)

இங்ஙனம்
பரிபாலனசபை
ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில்

SHAKTHI WORSHIP IS ONE OF THE OLDEST FORMS OF DIVINE WORSHIP IN HINDUISM. A NEW TEMPLE HAD BEEN CONSTRUCTED FOR OUR UNIVERSAL MOTHER SRI MUTHUMARI AMMAN AS GODDESS SUPREME IN LIVERPOOL IN A PLACE NAMED SRI MARIPURAM IN TAMIL. KUMBABHISEKAM (CONSECRATION) CEREMONY IS TO TAKE PLACE AT 9.30 A.M. ON THE 6TH APRIL,2012. ALL DEVOTEES OF AMBAL ARE INVITED TO ATTEND/PARTICIPATE IN THE CEREMONY AND RECEIVE THE DIVINE BLESSINGS OF SRI MUTHUMARIAMMAN.

## Commencement of Ceremonies

**Monday 2nd april,2012**
Ganapathy Homam
From 5.30 a.m to 12.noon
Shanthi Pooja
From 3.00.p.m to 8.00 p.m

**Tuesday 3rd april,2012**
Navagraha Pooja
9.00 a.m to 12.00 noon
Shanthi Pooja
4.00 p.m to 6.00 p.m.

**Wednesd ay 4th april,2012**
Prathiksha (Installation) of all deities
From 4.00 a.m. to 12.00 noon.
Yaga Pooja
From 3.00 p.m. to 12.00 noon.

**Thursday 5th april,2012**
Yaga Pooja
8.00 a.m to 12 noon
4.00 p.m to 8.00 p.m.
4.00 p.m to 8.00 p.m

**Friday 6th april 2012-**
Vigneswara Pooja to Kumbams
7.00 a.m to 9.30 a.m
Circumbulation of Kumbams and Maha Kumbhabishekam of deities;
9.30 a.m until 1.00 p.m
Lunch to all devotees.

Note: Mandalabhishekam will commence in the evening and continue for 48 days.

All well-known sivachariars in London Temples led by
**Siva Sri Saba Maheswara Kurukkal**
Chief Priest of London Sivan Kovil Lewisham
are scheduled to perform the ceremonies.

Oil anointing ceremony will commence at 10.00 a.m to 7.00 p.m on Wednesday and the 4th April 2012 from 10.00 a.m to 7.00 p.m. on Thursday the 5th april,2012